1972 நவம்பர் 14]

தஞ்சை மாவட்டத்தில் வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு மானியம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970—71-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு இம்மாநிலத்தின் பல்வேறு நல நிதிகளிலிருந்து ஒதுக்கப் பட்ட மொத்த மானியம் எவ்வளவு?

(இ) மேற்குறிப்பிட்ட காலத்தில் இம்மாவட்டங்களில் மானியம் அளிக்கப் பெற்ற முன்னாள் படை வீரர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு அளிக்கப் பெற்ற தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ரூ. 1,30,334.30.

(இ) முன்னாள் படை வீரரின் எண்ணிக்கை 309.

வழங்கப்பட்ட தொகை ரூ. 1,06,499.65.

Duties of Temple Trustees

* 312 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of **THAVA-THIRU** KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the duties of Temple Trustees?

அறங்காவலர்கள் ஆற்ற வேண்டிய பணிகள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதி லளிக்க வேண்டுகிறேன்—

திருக்கோயில் அறங்காவலர்கள் ஆற்றவேண்டிய பணிகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஒரு விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Renovation work of Srivilliputtur Andal Temple

* 313 *Q.*—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the renovation work of Srivilliputtur Andal Temple has commenced; and

(*b*) the names of the members of renovation Committee?

@ 121–123-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.